இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
திங்கள்கிழமை 02.02.2026

# சட்டம் ஒழுங்கு பற்றி பழனிசாமி பேசலாமா?

தினந்தோறும், 'நான் இருக்கிறேன்' என்பதைக் காட்டிக் கொள்வதற்காக அறிக்கை வெளியிட்டு வருகிறார் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி. தமிழ்நாடு அமைதியாக இருப்பதைப் பார்த்து அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதனால்தான், 'சட்டம் ஒழுங்கு கெட்டுப் போய்விட்டது' என்று பீதியைக் கிளப்பி சமூக அமைதியைக் கெடுத்துக் கொண்டிருக்கிறார்.

'சட்டம் ஒழுங்கு கெட்டுப் போய்விட்டது' என்பதைத் திரும்பத் திரும்பச் சொல்லி, தான் சொன்னதை அவரே நம்பிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

**சட்டம் ஒழுங்கைப் பற்றிப் பேசுவதற்கு பழனிசாமிக்கு எந்த அருகதையும் இல்லை. அதை தமிழ்நாடு பார்த்துள்ளது. தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு விவகார பழனிசாமி, பொள்ளாச்சி பாலியல் வழக்கு விவகார பழனிசாமி, சாத்தான்குளம் கொடூரக் கொலை வழக்கு விவகார பழனிசாமி, கொடநாடு கொலை கொள்ளை வழக்கு விவகார பழனிசாமி என்று தான் பெயர். இப்படித்தான் அவர் தமிழ்நாட்டு மக்களால் அழைக்கப்பட்டு வருகிறார்.**

பழனிசாமி ஆட்சி காலத்து நிலவரங்களை தமிழ்நாடு மறக்கவில்லை.

★ **கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த 11 துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் மூன்று குற்றவாளிகள் உயிரிழந்ததோடு, 12 காவல் துறையினர், இரண்டு பொதுமக்கள் மற்றும் ஒரு குற்றவாளி என 15 பேர் காயமடைந்துள்ளனர்.**

★ **2020ஆம் ஆண்டு நடந்த ஐந்து துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் ஒரு குற்றவாளி உயிரிழந்ததோடு, இரண்டு காவல் துறையினர், ஒரு குற்றவாளி என மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.**

★ **2021ஆம் ஆண்டு நடந்த ஆறு துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் ஐந்து குற்றவாளிகள் உயிரிழந்ததோடு, ஆறு காவல் துறையினர், இரண்டு குற்றவாளிகள் என எட்டு பேர் காயமடைந்துள்ளனர்.**

இதுதான் பழனிசாமி ஆட்சி காலத்து சட்டம் ஒழுங்கு ஆகும்.

பழனிசாமி ஆட்சி காலத்தில் கடந்த 2018, 2019 மற்றும் 2020ஆம் ஆண்டு காலத்தில் சிறார்களுக்கு எதிராக 6 ஆயிரத்து 944 பாலியல் வன்கொடுமை வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருப்பதாக நாடாளுமன்றத்தில் ஒன்றிய அரசு தெரிவித்தது.

மக்களவையில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு உள்துறை இணை அமைச்சர் அஜய்குமார் மிஸ்ரா எழுத்துபூர்வமாக அளித்த பதிலில், கடந்த 2018 ஆம் ஆண்டில் ஆயிரத்து 881 வழக்குகளும், 2019ஆம் ஆண்டில் 2 ஆயிரத்து 216 வழக்குகளும், 2020ஆம் ஆண்டு 2 ஆயிரத்து 847 சிறார்களுக்கு எதிரான பாலியல் வழக்குகளும் பதிவு செய்யப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

**அ.தி.மு.க. ஆட்சியில் பொள்ளாச்சியில் பாலியல் வன்கொடுமை தொடர்ந்து நடந்தது. அதன் மீது பழனிசாமி அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் புகார் கொடுத்தார்கள். அப்படி புகார் கொடுத்தவர்கள் மிரட்டப்பட்டார்கள். தி.மு.க. மகளிரணி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்ட பிறகுதான் ஒருசிலர் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டவர்களே போலீஸை மிரட்டினார்கள். சம்பந்தப்பட்ட ஒருவர், கலெக்டர் அலுவலக வாசலுக்கு வந்து பேட்டி கொடுத்தார். இன்னொருவர் முதலமைச்சர் பழனிசாமி பெயரைச் சொல்லி தனது செல்வாக்கை மீடியாவிடம் காட்டினார். இன்னொருவர் தனக்கும் அமைச்சர் வேலுமணிக்கும் நெருங்கிய தொடர்பு உள்ளதாக காட்டிக் கொண்டார்.**

இது பற்றி பத்திரிக்கையாளர்கள் அன்றைய முதலமைச்சர் பழனிசாமியைக் கேட்டார்கள். "அப்படியெதுவும் இல்லை, ஆதாரம் இருந்தால் கொடுங்கள்" என்ற மகா யோக்கியர்தான் இந்த பழனிசாமி. **சி.பி.ஐ.க்கு வழக்கு ஒப்படைக்கப்படும் வரை குற்றவாளிகளைக் காப்பாற்ற அ.தி.மு.க. அரசு முயற்சித்தது. இதுதான் பழனிசாமி ஆட்சி ஆகும்.**

தூத்துக்குடியில் 13 உயிர்களை துள்ளத் துடிக்க சுட்டிக் கொல்ல உத்தரவிட்டவர்தான் இந்த பழனிசாமி.

'தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு சம்பவம் பற்றி அப்போதைய முதல் அமைச்சர் எடப்பாடி பழனிசாமி, 'அந்த சம்பவத்தை மற்றவர்களைப் போல ஊடகங்களில் வந்த செய்தி மூலம் அறிந்து கொண்டேன்' என்று பத்திரிக்கையாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

ஆனால் இந்த ஆணையத்திடம் மிக வலுவாக இருக்கும் ஆதாரம் என்னவென்றால், சாட்சியாக விசாரிக்கப்பட்ட அப்போதைய தலைமைச் செயலாளர் கிரிஜா வைத்தியநாதன், அப்போதைய டி.ஜி.பி.ராஜேந்திரன், அப்போதைய உளவுத்துறை ஐ.ஜி. சத்தியமூர்த்தி ஆகியோர் தூத்துக்குடியில் நடக்கும் சம்பவங்களையும், அங்குள்ள நிலவரங்களையும் நிமிடத்துக்கு நிமிடம் எடப்பாடி பழனிசாமியிடம் தெரிவித்து வந்ததாகக் கூறினார்கள்.

எனவே, ஊடகங்கள் மூலமாகத்தான் அந்த சம்பவம் பற்றி தெரிந்து கொண்டதாக எடப்பாடி பழனிசாமி கூறியது தவறான கருத்து என்பது இந்த ஆணையத்தின் கருத்தாகும்" என்று நீதியரசர் அருணா ஜெகதீசன் ஆணையத்தின் இறுதி அறிக்கை சொல்கிறது. இத்தகைய பழனிசாமிதான் இப்போது சட்டம் ஒழுங்கைப் பற்றி பேசுகிறார்.

**ஜெயலலிதாவின் பங்களாவில் கொலையும், கொள்ளையும் நடந்தது யார் ஆட்சியில்? பெண் போலீஸ் ஐ.ஜி.க்கே பாதுகாப்பு இல்லாத வகையில் ஆட்சி நடத்தியது யார்? கஞ்சா கடத்தல் அதிகமாக நடந்தது யார் ஆட்சியில்? அமைச்சரும், போலீஸ் அதிகாரிகளுமே மாமூல் பட்டியலில் இருந்தார்களே!**

**இதற்கெல்லாம் பதில் சொல்ல யோக்கியதை உண்டா பழனிசாமிக்கு?**

●●

## அரியலூர் மாவட்டச் செயற்குழுக் கூட்டம்!

அரியலூர், பிப். 2–

அரியலூர் மாவட்ட கழகச் செயற்குழுக் கூட்டம், அரியலூர் மாவட்டக் கழக அலுவலகத்தில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் தலைமையில் நடைபெற்றது. இதில் தமிழ்நாடு அரசு போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளிடம் பேசியதாவது:–

பிப்ரவரி 1ஆம் தேதி தொடங்கி மார்ச் 8ஆம் தேதி வரை வெல்லும் தமிழ்ப்பெண்கள் மகளிர் பரப்புரை ஒன்றியம், நகர, பேரூர் கழகங்கள் தோறும் மிக சிறப்பாக நடத்திட வேண்டும், தமிழ்நாடு தலைகுனியாது தொகுதி பரப்புரை பொதுக்கூட்டங்கள் மாவட்டம் முழுவதும் திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகளை மக்களிடம் பரப்புரைக் கூட்டங்கள் நடத்திட வேண்டும்,

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழாவை மாவட்டம் முழுவதும் நலத்திட்ட உதவிகள் வழங்கி கொண்டாட வேண்டும், மேலும் எதிர்வருகின்ற 08.03.2026 அன்று நடைபெறும் "ஸ்டாலின் தொடரட்டும். தமிழ்நாடு வெல்லட்டும் மாநில மாநாட்டிற்கு அரியலூர் மாவட்ட கழகத்தின் சார்பில் பெருந்திரளாக கலந்து கொள்ளவேண்டும், உள்ளிட்ட கழக ஆக்கப் பணிகள் குறித்தும் உரையாற்றினார்.

இக்கூட்டத்தில் ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் க.சொ.க. கண்ணன், மாவட்ட துணை செயலாளர்கள் மு.கணேசன், சி.சந்திரசேகரன், லதாபாலு, மாவட்ட பொருளாளர் கு.இராஜேந்திரன், ஒன்றிய கழக பொறுப்பாளர்கள் தனசேகர், இரா. கென்னடி, பூ.செல்வராஜ், இரா.மணிமாறன், மா. அன்பழகன்,ரெ. சக்கரவர்த்தி, கோ. அறிவழகன், ஆர்.கலியபெருமாள், வி.எழில்மாறன், இரா. அண்ணா துரை, ப.தனவேல், தெய்வ. இளையராஜன், நா.கணேசன், பொன். செல்வம், கே.ஜி.எஸ். முருகன், இரா.செந்தில்குமார், நகர கழக செயலாளர்கள்

இரா.முருகேசன், வெ.கொ.கருணாநிதி, பேரூர்க் கழகச் செயலாளர்கள். ப.கோபால கிருஷ்ணன் அ.அல்போன்ஸ், பொதுக்குழு உறுப்பினர்கள் ஆர்.எம்.அன்பழகன், இரா. பாலு, வி.எம்.ஷாஜகான், சுமதி கருணாநிதி, மாவட்டப் பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.லூயிகதிரவன் மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம்!

# நாளேடுகளின் பார்வையில் முதல்வர் மு.க.ஸ்டாலின்!






திருச்சியில் தமிழக அரசியலில் திருப்புமுனையை ஏற்படுத்தும் வகையில் கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, 'ஸ்டாலின் தொடரட்டும்', 'தமிழ்நாடு வெல்லட்டும்' என்கிற தலைப்பில் மிகப்பிரம்மாண்டமான மாநாடு மார்ச் 8 தேதி நடைபெற உள்ளது. திருச்சி சிறுகனூரில் நடைபெறும் இந்த மாநாட்டில் சுமார் 10 லட்சம் பேர் கலந்து கொள்கின்றனர். இந்நிலையில் மாநாட்டுப் பணிகளைத் தொடங்கும் விதமாக திருச்சி சென்னை தேசிய நெடுஞ்சாலை சிறுகனூரில் மாநாடு நடைபெறும் இடத்தில் பந்தக்கால் நடும் நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தி.மு.க. முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு, தெற்கு மாவட்டச் செயலாளரும், பள்ளிக்கல்வித் துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி ஆகியோர் மாநாட்டு பணிகளைத் தொடங்கி வைத்தனர். இந்த நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர்கள் காடுவெட்டி தியாகராஜன், பழனியாண்டி, சௌந்திரபாண்டியன், ஸ்டாலின் குமார், கதிரவன், மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன், கிழக்கு மாநகரச் செயலாளர் மதிவாணன், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட துணைச் செயலாளர் முத்துச்செல்வம், விஜய், ஜெயராஜ் மற்றும் கழக நிர்வாகிகள் சேர்மன் துரைராஜ், காஜாமலை, விஜய், மாத்தூர் கருப்பையா, டோல்கேட் சுப்பிரமணி உட்பட ஒன்றியச் செயலாளர்கள், பகுதிச் செயலாளர்கள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தமிழகத்தில் ரூ.12,000 கோடி முதலீடு!

## தோல் பொருள் ஏற்றுமதி நிறுவன இயக்குநர் தகவல்!

**சென்னை, பிப். 2-**

**வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.12,000 கோடி முதலீடு செய்துள்ளதாக தோல் பொருள் ஏற்றுமதி நிறுவனத்தின் இயக்குநர் ஆர்.செல்வம் தெரிவித்தார்.**

இதுதொடர்பாக சென்னையில் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது:

இந்திய சர்வதேச தோல் மற்றும் தோல் பொருள்கள் கண்காட்சி ஞாயிற்றுக்கிழமை (பிப்.1) முதல் பிப். 3ஆம் தேதி வரை சென்னை நந்தம்பாக்கத்தில் உள்ள வர்த்தக மையத்தில் நடைபெறுகிறது.

இந்தக் கண்காட்சியில் தோல் மூலப் பொருள்கள் மற்றும் காலணிகள் தொடர்பான அனைத்து பொருள்களும், இயந்திரங்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இதில், 350 இந்திய தோல் பொருள் உற்பத்தி நிறுவனங்களும், 80 வெளிநாட்டு நிறுவனங்களும் பங்கேற்கின்றன. இந்தியாவில் இருந்து ஐரோப்பிய ஒன்றியத்துக்கு 43 சதவீத தோல் பொருள்கள் ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன.

**5 லட்சம் பேருக்கு வேலை கிடைத்துள்ளது!**

இந்தத் துறை மூலம் வரும் 2030 ஆம் ஆண்டுக்குள் 50 பில்லியன் டாலர் ஏற்றுமதி செய்ய இலக்கு நிர் ணயிக்கப்பட்டுள்ளது. இதுவரை 14 பில்லியன் டாலர் இலக்கை அடைந்துள்ளோம். இந்தியாவில் இருந்து தோல் பொருள்கள் ஏற்றுமதியில் 40 சதவீதம் தமிழகத்தில் இருந்து ஏற்றுமதி செய்யப்படுகிறது.

தமிழகத்தில் ராணிப்பேட்டை, கள்ளக்குறிச்சி, அரியலூர், பெரம்பலூர், செய்யாறு, திண்டிவனம் உள்ளிட்ட இடங்களில் வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தொழிற்சாலைகளைத் தொடங்கியுள்ளன. வெளிநாட்டு காலணி நிறுவனங்கள் தமிழகத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ரூ.12,000 கோடி முதலீடு செய்துள்ளது. இதன் மூலம் 5 லட்சம் பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ளது.

தமிழகத்தில் உள்ள தோல் பொருள் உற்பத்தி தொழிற்சாலைகளில் 80 சதவீத பெண்கள் பணியாற்றி வருகின்றனர். இதன்மூலம் பெண்களின் வாழ்வாதாரம் உயர்ந்துள்ளது. மேலும், சமூக பொருளாதாரம் வளர்ச்சி அடைந்துள்ளது என்றார் அவர்.

பேட்டியின்போது தோல் பொருள் ஏற்றுமதி நிறுவனத்தின் தெற்கு பிரிவின் தலைவர் எம்.அப்துல் வஹாப் உடனிருந்தார்.

# பா.ஜ.க. ஆளும் ம.பி.யில், கடுகுக்கு பதில் களி மண் கலந்து மோசடி - ஊழல்!

*போபால், பிப். 2-*

*பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலை திட்டத்தின் கீழ், களி மண் கலந்த கடுகு கொள்முதல் செய்யப்பட்ட ஊழல் அம்பலமாகி உள்ளது. இவ்விவகாரத்தில் 5 அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*மத்தியப் பிரதேசத்தில் குறைந்தபட்ச ஆதரவு விலை கொள்முதலில் கடுகு உள்ளிட்ட சிறுதானியங்கள் கொள்முதல் செய்யப்பட்டன. கொள்முதல் செய்யப்பட்ட தானியங்கள் தேசியப் பொருட்கள் மேலாண்மை சேவைகள் லிமிடெட் நிறுவனத்தின் ஆய்வாளர்களால் தரச் சோதனை செய்யப்பட்டு, அங்கீகரிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது.*

*இந்த நிலையில் சாகர் மாவட்டத்தில் ரேஹ்லியில் உள்ள ஒரு கிடங்கில் உள்ள கடுகுகளை வாங்க ஏலம் பெற்ற நிறுவனத்தின் ஆய்வாளர்கள், ஒரு கைப்பிடி கடுகு விதைகளை எடுத்து சோதனை செய்தனர். அப்போது, தண்ணீரில் போட்ட கடுகு விதைகள் சில வினாடிகளில், உடைந்து கரைந்து, சேறாக மாறத் தொடங்கின. கொள்முதல் செய்யப்பட்ட கடுகு இருப்பில் 35 முதல் 40 சதவீதம் வரை தானியமே அல்ல, மாறாக உணவுப் பொருள் போல தந்திரமாக மாற்றப்பட்ட களிமண் துகள்கள் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நடத்தப்பட்ட விசாரணையில், இரண்டு கூட்டுறவு சங்கங்கள் மூலம் கொள்முதல் செய்யப்பட்ட கடுகில் 257 குவிண்டால் இருப்பில் ஒரு குவிண்டாலுக்கு 35முதல் 40 சதவீதம் களிமண் கலப்படம் செய்யப்பட்டிருப்பது தெரியவந்தது. இது பற்றி கூட்டுறவு சங்க இயக்குநர்கள், நில அளவையர்கள், கிடங்கு மேலாளர் உட்பட 5 அதிகாரிகள் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இந்த மோசடி மூலம் ஒரே ஒரு கிடங்கில் மட்டும் அரசுக்கு சுமார் 1 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.*